**கலேவல பிரதேச சபையி ் - 2024**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கலேவல பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்வாறு ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானம் மற்றும் செலவினக் கணக்கு மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய பொழிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கலேவல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்.

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும.

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும.

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் 02 அபிவிருத்தி திட்டங்களுக்காக செலவிடப்பட்ட மொத்தம் ரூபா 1,237,905 மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | 2025 இற்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது சீர் செய்வதாக. | கணக்குகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியன்று தயாரிக்கப்பட்ட ஐந்தொகையில் காட்டப்பட்டுள்ள 05 கணக்கு மீதிகளுக்குரிய பயன்பாட்டு பதிவேடுகள் மற்றும் அட்டவணைகளுடன் மீதிகளுடன் ஒப்பிடும் போது ரூபா. 31,240,168 ஆன இணக்கமின்மை காணப்பட்டது. | மீதிகளை தீர்வு செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழு அறிக்கை வழங்கப்பட்ட பின்னர் எதிர்வரும் நடவடிக்கை எடுப்பதாக. | கணக்கு மீதிகள் சரி செய்யப்படல் வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் காணப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா. 3,400,584 கூட்டுத்தொகையான சொத்து விடயமொன்றுக்குரிய பதிவேடுகள், அட்டவணைகள் மற்றும் கோவைகள் என்பன சமர்ப்பிக்கப்படாமை காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்துத. | மீதிகளை தீர்வு செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழு அறிக்கை வழங்கப்பட்ட பின்னர் எதிர்வரும் நடவடிக்கை எடுப்பதாக. | கணக்கு மீதிகள், அட்டவணைகளுடன் ஒப்பிடப்படல் வேண்டும். |

## 1.7 <u>இணக்கமின்மைகள்</u>

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ) பாராளுமன்ற சட்டம்** | | | |
| 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அந்தச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் திருத்தப ்பட்ட ஏற்பாடுகள் 2021 ஜூலை 08 திகதிய 2235/54 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திட்டமிடல் மற்றும் கட்டிட கட்டளை / பிரமாணம் ஏஐ பகுதி 83 ஆம் பிரிவு | 2020–2024 காலப்பகுதியில் அங்கீகரிக்கப்பட்ட 317 அபிவிருத்தி அனுமதிப் பத்திரங்களுக்கு இணக்கச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | அபிவிருத்தி அனுமதி விண்ணப்பதாரர்கள் நிர்மாணப் பணிகளை முடிக்கவில்லை என்பதாக. | நிர்மாணங்களை பூர்த்தி செய்த கட்டிடங்களுக்கு இணக்கச் சான்றிதழ்கள் வழங்கப்பட வேண்டும். |
| **(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்** | | | |
| நிதி பிரமாணம் 571(3) | 2019 ஆம் ஆண்டு முதல் 2024 வரையிலான காலப் பகுதிக்குரிய ரூபா 7,240,115 ஆன காலாவதியான 150 வைப்புக்கள் தீர்வு செய்யப்படவில்லை. | பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக | காலாவதியான வைப்புக்களை தீர்வு செய்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமா்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 32,209,133 ஆக இருந்ததுடன் அதனேடொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 16,404,940 ஆக காணப்பட்டது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபையின் செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2024 | | | | 2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i). வீதவரியும் வரியும் | 6,013,000 | 5,574,977 | 5,176,347 | 1,318,854 | 2,000,000 | 1,927,067 | 1,392,673 | 920,224 |
| (ii). வாடகை | 8,195,056 | 10,578,582 | 10,269,952 | 443,804 | 4,881,000 | 4,647,488 | 4,247,092 | 135,174 |
| (iii). அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 2,711,000 | 3,131,457 | 3,130,457 | 1,000 | 4,450,000 | 5,141,032 | 5,141,032 | - |
| (iv). ஏனைய வருமானம் | 45,296,000 | 46,845,406 | 23,758,702 | 45,183,866 | 46,866,000 | 28,611,276 | 8,630,923 | 22,097,162 |
| மொத்தம் | 62,215,056 | 66,130,422 | 42,335,458 | 46,947,524 | 58,197,000 | 40,326,863 | 19,411,720 | 23,152,560 |

#### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **வீதவரியும் வரியும்** | | |

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு ரூபா 937,761 ஆன நிலுவை வீதவரி மீதியொன்று காணப்பட்டது. அதில் அலகொன்று ரூபா 2,000 ஐ மிகைத்த 122 வீதவரி அலகுகளில் இருந்து ரூபா 627,827 ஆன நிலுவை வீதவரி மீதியை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | நிலுவைத் வருமானம் அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேவஹுவ தாதுபேதிருப்ப லேக்வியூ சிட்டி என்ற பெயருடைய 01 ஏக்கர், 03 ரூட் மற்றும் 31.2 பேர்ச் பரப்பளவிலான காணி 19 காணித் துண்டுகளாகப் பிரிக்கப்பட்டு, அவற்றில் 07 காணித் துண்டுகள் மீளாய்வாண்டில் விற்பனை செய்யப்பட்டிருந்த போதிலும், அதற்கு ஒரு சதவீத வரி மற்றும் உட்பிரித்தலுக்கான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மேற்கொள்ளப்பட்டுள்ள நிர்மாணங்களுக்கு திட்டமிடல் கட்டணங்களை அறவிடுவதற்கும், விலைகள் சமர்ப்பிக்கப்பட்ட காணித் துண்டுகளின் மதிப்பீட்டு அறிக்கைகளைப் பெற்று, ஒரு சதவீத கட்டணங்களை வசூலிக்கவும் நடவடிக்கை எடுப்பதாக. | விற்பனை அடிப்படையில் வரி விதிக்கப்பட வேண்டியதுடன அங்கீகாரத்தைத் பெற்றுக் கொள்ளாமை குறித்து சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | தொலபுகஹ முல்லேபிட்டியஹேன என்ற பெயரிலான 5 ஏக்கர் 37 பேர்ச் அளவிலான காணியை பகுதிகளாக்கும் போது சுற்றாடல் அதிகாரசபை, தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பு மற்றும் பிரதேச சபையின் பரிந்துரைகளை செயல்படுத்தாமலும், உரிய அங்கீகாரம் ஒன்ற இல்லாமலும் 2018 ஆம் ஆண்டில் துண்டுகளாக்கி காணித் துண்டுகளை விற்பனை செய்துள்ளது. இது தொடர்பாக பொருத்தமான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக. | சட்ட நடவடிக்கை களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 விளைவற்ற அல்லது பயன்படுத்தப்படாத ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 9,707,455 நிதி ஏற்பாட்டின் பேரில் நிர்மாணிக்கப்பட்ட புதிய திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையம் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் செயலற்ற நிலையில் காணப்பட்டது. | 2025 ஆம் ஆண்டு கூரை இடப்பட்ட பிறகு இந்தக் கட்டிடம் பயன்பாட்டுக்கு எடுக்கப்படும். | கட்டிடத்தை அதன் நோக்கத்திற்குட்பட்ட செயயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபையால் பயன்படுத்தப்படுகின்ற 58 மயானங்கள், காணிகள் மற்றும் 42 கட்டிடங்கள் பொது நடவடிக்கைகளுக்காக சபைக்கு கிடைத்துள்ள காணிகளின் உரித்து சபைக்கு கையேற்கப்பட்டிருக்க வில்லை. | கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக. | சபைக்கு சொந்தமான ஆதனங்களை கையேற்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். |

### 3.4 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| .சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருடன் உள்ளவா றான பதவியணியை ஒப்பிடும் போது 16 ஆரம்ப தர பதவிகள் 10 இரண்டாம் தர பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் 12 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள், மிகையாகக் காணப்பட்டன. | பதவியணியினர் வெற்றிடங்கள் மற்றும் மிகை குறித்து தலைமைச் செயலகம் மற்றும் உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு தகவல் அறிவிக்கப் பட்டுள்ளதாக. | வெற்றிடங்கள் மற்றம் மிகை தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். |

### 3.5 வாகன முறைமை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 ஆம் ஆண்டில் சபைக்குக் கிடைத்த 02 வாகனங்களின் உரித்தினை சபைக்கு கையேற்கப்பட்டிருக்கதவில்லை.<br>. | கையேற்கும் செயல்முறை நடைபெற்று வருவதாக. | சபைக்குச் சொந்தமான சொத்துக்களை கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |